# நாகப்பட்டினம் நகராட்சி

2025– ம் ஆண்டு ஜீன் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை

தீர்மான நகல்

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 13.06.2025 | **பொருள் எண்.** 1<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் மே 2025 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் | தீர்மானம் எண். 41<br>பதிவு செய்யப்பட்டது. |
| 13.06.2025 | **பொருள் எண்.** 2<br>நாகப்பட்டினம் நகராட்சியின் மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ல் ரூ.200.00 இலட்ச மதிப்பீட்டில் புதியதாக கட்டுப்பட்டு நடைமுறையில் உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை பாதுகாக்கும் நோக்கில் தினசரி இரு காவலர்கள் அமர்த்துதல், அவ்வப்போது ஏற்படும் குடிநீர் விநியோகம் பாதிப்பு, பொது சுகாதாரம், மின்சார பழுதுகள் மற்றும் இணையதள வசதியுடன் கூடிய கணினி தொடர்பான பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. மேற்படி நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் 2025-26 ம் ஆண்டிற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 4003 /2021/இ1 | தீர்மானம் எண். 42<br>அ.கு, அனுமதிக்கப்பட்டது. |
| 13.06.2025 | **பொருள் எண்.** 3<br>நாகப்பட்டினம் நகராட்சியின் மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ல் ரூ.200.00 இலட்ச மதிப்பீட்டில் புதியதாக கட்டுப்பட்டு நடைமுறையில் உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை தினசரி கண்காணித்து வரும் ஒப்பந்த அடிப்படையிலான நூலகர் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு ஆகும் மாத ஊதியம் மற்றும் மதிப்பூதியத் தொகையினை 2025-26ம் ஆண்டிற்கு வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.75இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு:<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். .<br>ந.க.எண். 4003 /2021/இ1 | தீர்மானம் எண்.43<br>அ.கு, அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td>13.06.2025</td><td>பொருள் எண். 4<br>நாகப்பட்டினம் நகராட்சியின் மூலம் 2025–26–ம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ள திட்டப்பணிகள் தொடர்பாக ஒப்பந்தப்புள்ளி கோரிஅறிவிப்புகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரங்கள் தினசரி நாளிதழில் விளம்பரம்செய்தல், பொறியியல் பிரிவு தொடர்பான ஏலம் விளம்பரம் செய்தல் தமிழக அரசின் ஆண்டு சாதனைகளை விளம்பரம் செய்தல் மற்றும் இதர வகையான விளம்பரங்களை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச விளம்பர கட்டணத்தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண். 147 /2025/இ1</td><td>தீர்மானம் எண்.44<br>அ.கு. அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>13.06.2025</td><td>பொருள் எண். 5<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படியான இடங்களுக்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திடம் 2025–26ம் ஆண்டிற்கு தடையின்மை சான்று பெறுதல் மற்றும் புதுப்பித்தலுக்கு அனுமதி பெறவேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>விபரங்கள்</th></tr>
<tr><td>1</td><td>நவீன எரிவாயு தகனமேடை , நாகப்பட்டினம்.</td></tr>
<tr><td>2</td><td>நவீன ஆடு அறுக்கும் தொட்டி , நாகப்பட்டினம்.</td></tr>
<tr><td>3</td><td>பாதாளச்சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நாகப்பட்டினம்.</td></tr>
<tr><td>4</td><td>பாதாளச்சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நாகூர்</td></tr>
<tr><td>5</td><td>நாகூர்மற்றும் கப்பட்டினம் பகுதியில் இயங்கிவரும்MCC 3 எண்ணிக்கைகள்</td></tr>
</table>
மேற்காணும் இடங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்ட வருவதற்கு தடையின்மை சான்றினை பெறுதல் மற்றும் புதுப்பித்தலுக்கு உத்தேச கட்டணத்தொகை ரூ.10.00 இலட்சத்தில் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>
<table>
<tr><td>அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td></td><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய், குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td></td><td>3</td><td>தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து வரபெறும் கேட்பிற்கேற்ப தொகையினை வழங்கடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td></td><td>4</td><td>மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண். 147 /2025/இ1</td><td>தீர்மானம் எண்.45<br>அ.கு. அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 13.06.2025 | **பொருள் எண். 6**<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் 147/2025/இ1 | தீர்மானம் எண்.46<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 13.06.2025 | **பொருள் எண்.7**<br>நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இதர கட்டிடங்களில் பொறுத்தப்பட்டுள்ள தீதடுப்பு (Fire Extinguisher) கருவி சாதனங்களின் தன்மை காலவாதியாகிவிட்டபடியால் அதனில் மீண்டும் இரசாயனத்தினை நிரப்புவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் 147/2025/இ1 | தீர்மானம் எண்.47<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 13.06.2025 | **பொருள் எண்.8**<br>நாகப்பட்டினம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரத்தை ஆய்வு செய்ய OCEMS என்ற கருவி பொருத்தப்பட்டுள்ளது. அதனை ஒரு ஆண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்ய அதற்குண்டான இனங்களுக்கு விலைப்புள்ளி பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட விலைப்புள்ளியை கொண்டு மதிப்பீடு தயார் செய்யும் போது அதில் விடுபட்டிருந்த GST 18% சேர்த்ததினால் தற்போது மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி ஆவண செய்ய வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண் 147 /2025/இ1 | தீர்மானம் எண்.48<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>13.06.2025</td>
<td>
பொருள் எண்.9<br>
தமிழ்நாடு சட்டப் பேரவை – 2023 – 24 மாண்புமிகு மக்கள் மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி நாகப்பட்டினம் மருந்துகொத்தளம் சாலையில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை புதியதாக அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.120.00 இலட்சம் புதிய கட்டிடம் அமைப்பதற்கு 15 வது நிதிக்குழு சுகாதார மானியம் 2023–24ன் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 22441/2023/இஏ2 நாள் 19.11.2024ல் 15வது நிதிக்குழு சுகாதாரம் மானியம் 2023–24ன் கீழ் மதிப்பீடு ரூ120.00 இலட்சத்தில் புதிதாக கட்டிடம் அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உரிய ஒப்பந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணியினை தொடர வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.அதனைத்தொடர்ந்து நாகப்பட்டினம் மருந்துக்கொத்தளம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய பழைய கட்டிடத்தினை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதியதாக கட்டிடம் அமைக்கப்படவேண்டியுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் புதிதாக கட்டடம் அமைக்கப்படவுள்ள இடத்தில் அமைந்திருக்கும் பழைய கட்டிடத்தினை இடித்து அப்புறப்படித்திட மதிப்பீடு ரூ.150000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்படி கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு நகராட்சி நிருவாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 1652/2023/மாதி.1 நாள் 10.05.2025ல் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 28.05.2025 அன்று பொது ஏலம் கோரப்பட்டதில் திரு. ஆர்.கே. முத்துக்கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் என்பவர் உயர்ந்தபட்ச கேள்வி தொகையாக ரூ. 152000/– கேட்கப்பட்டதனை ஏற்பதற்கும் திட்ட பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் கட்டிடத்தினை இடித்து அகற்றுவதற்கான பணியினை மேற்கொள்ள நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td rowspan="3">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>28.05.2025 அன்று பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச கேள்வி தொகையாக ரூ.152000/– கோரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்</td></tr>
<tr><td>3</td><td>நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை உடன் மேற்கொள்வதற்கும் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண் 3058/2023/இ1
</td>
<td>தீர்மானம் எண்.49<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>13.06.2025</td>
<td>
பொருள் எண்.10<br>
நாகப்பட்டினம் நகராட்சியின் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற 21 வது பொதுவான திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு அறிக்கை நாள் 30.04.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து 05.05.2025 அன்று தலைமை பொறியாளர் நகராட்சி நிருவாக இயக்குநரகம் சென்னை அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து
</td>
<td>தீர்மானம் எண். 50<br>அ.கு,<br>பதிவு<br>செய்யப்பட்டது<br>.</td>
</tr>
</table>

29.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| **வ, எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் களின் விபரம்** | **மதிப்பீட்டு விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| | | | | **குறைவு** |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட குஞ்சாலி மரைக்காயர் தெரு, மணவரா வடக்கு தெரு மற்றும் சலவைக்குளம் முகமதியார் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 47.50 | திரு. எஸ்.சத்யநாராயணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.01 |
| | | | திரு.பி.சிவசக்தி, ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம். | -- |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட மியான் தெரு மற்றும் பொரையாத்தான்கடை தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 58.50 | திரு.ஜே.ஜேசு, ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.02 |
| | | | திரு. என். செந்தில்குமார், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | -- |
| 3 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பழைய நாகூர் ரோட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 55.50 | திரு.ஆர்.கே. முத்துகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.01 |
| | | | திரு.கே. கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம். | -- |
| | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தெருப்பள்ளி ரோட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 19.00 | திரு. பி.ரகுநாதன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.02 |
| | | | திரு.கே. கோபாலகிரு | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஷ்ணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | | 70 |
| | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நீலா மேல வீதி, சட்டையப்பர் மேல வீதி மற்றும் கல்லுக்கார தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 58.50 | திரு.கே. கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.01 | -- |
| | | | திரு. பி.ரகுநாதன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | -- | 0.61 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். |

ந.க.எண். 2103/2023/இ1

13.06.2025

**பொருள் எண்.11**

நாகப்பட்டினம் நகராட்சியில் பாதாள சாக்கடை நிதி 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு 06.06.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்த நிறுவனத்தின் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் பாதாளச் சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள OCEMS கருவிகளை பராமரிப்பு செய்யும் பணி | 9.00 | ஆர்.எல் டெக்னாலஜிஸ், பிரைவேட் லிமிடெட், செங்கல்பட்டு. | 0.11 | -- |
| | | | சுவராஜ், பிரைவேட் லிமிடெட்,சென்னை. | -- | 3.41 |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ்.ஆர்.எல்.டெக்னாலஜிஸ்,பிரைவேட் லிமிடெட், செங்கல்பட்டு ஒப்பந்த நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலக | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற |

தீர்மானம் எண். 51

அ.கு, அனுமதிக்கப்பட்டது
.

| | | | | |
|---|---|---|---|---|
| | குறிப்பு | | ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அனுமதி வழங்கலாம். | |
| | | **3** | மேற்காணும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணியினை உடன் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | ந.க.எண்147/2025/இ1 | | | |
| 13.06.2025 | **பொருள் எண்.12**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் நேதாஜி சாலையில் நெடுஞ்சாலைதுறையின் மூலம் நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை – வேளாங்கண்ணி சாலையில் இரயில்வே கடவு எண் 48. அருகே மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்காணும், மேம்பாலம் அமைக்கும் பணிக்கு இடையூராக உள்ள நகராட்சி கட்டிடங்களை இடித்து அகற்றிட மாவட்ட நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களின் நேராய்வில் அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்காணும் பொருள் தொடர்பாக மாவட்ட அளவில் நடைபெறும் வாரந்திர கூட்டங்களிலும் மற்றும் பணி முன்னேற்றம் தொடர்பான ஆய்வுகூட்டங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி கட்டிடங்களை இடித்து அகற்றிடும் பணியில் வணிக வளாகம், பழைய பேருந்து நிலைய கட்டிடம் மற்றும் கழிவறை கட்டிடம் கட்டிடத்தினை இடித்து உடன் அகற்றிடவும், அவ்விடத்தில் பதியப்பட்டு உள்ள பாதாளச்சாக்கடை கழிவுநீர் குழாயினை மாற்றி அமைத்திட அறிவுறுத்தப்பட்டதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண் 247 நாள் 30.09.2024 அன்று நகர்மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் மேம்பால கட்டுமான பணிக்கு இடையூராக அமைந்துள்ள வணிக வளாகம், பழைய பேருந்து நிலைய கட்டிடம் மற்றும் கழிவறை கட்டிடம் கட்டிடத்தினை துரிதமாக அகற்றிட மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதனைத்தொடர்ந்து மூன்றுமுறை பொது ஏலம் கோரப்பட்டதில் எவரும் பொது ஏலம் கோரிட முன்வராத காரணத்தினால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு துறையின் மூலமாக நகராட்சி ஒப்பந்ததாரர்களின் மூலம் மேற்கொள்வதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.ஆர்.கே.முத்துகிருஷ்ணன், நாகப்பட்டினம் என்பவரின் மூலமே உடன் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தி 10.03.2025 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியத்தினை கருதி துறைமூலமாக மேற்கொள்ளப்பட்டமைக்கு உண்டான மதிப்பீட்டு தொகை ரூ. 5.75 இலட்சத்தினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | | | தீர்மானம் எண்.52<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| | அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | | 2 | மேற்கண்ட பணியின் நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம் | |
| | | | மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | |

ந.க.எண்3462/2024/இ1

13.06.2025

**பொருள் எண்.13**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 சிவன் கீழ வீதி மற்றும் சந்தைத்தோப்பு இணைப்பு சாலையில் உள்ள சிறுபாலம் ஆனது மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே, மேற்படி சிறுபாலத்தினை புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 147 /2025/இ1

தீர்மானம் எண்.53
அ.கு,
அனுமதிக்கப்பட்டது.

13.06.2025

**பொருள் எண்.14**

நாகப்பட்டினம் நகராட்சியின் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற 19வது பொதுவான திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு அறிக்கை நாள் 17.04.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், தஞ்சாவூர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 07.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14ல் திரௌபதி அம்மன் கோவில் குளம் மேம்பாடு செய்யும் பணி (வார்டு எண் 4, பிளாக் எண் 32, நகரளவு எண் 1294/3A) | 44.00 | திரு. ஜே.ஜேசு, ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.02 | -- |
| | | | திரு.எஸ்.கருணாநிதி, ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம். | -- | 1.05 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட 0.02 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஜே.ஜேசு என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.54
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு 1 மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| | ந.க.எண். 773/2023/இ1 | |
| 13.06.2025 | **பொருள் எண்.15**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2024-25ன் கீழ் நாகப்பட்டினம் கிழக்கு கடற்கரை சாலையில் புதியதாக புறநகர் பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு 19-07-2024 தேதியிட்ட அரசாணை (4டிநிலை) எண்.20 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எஸ் எஸ் & எப் சி) துறையால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு நகராட்சியின் பங்களிப்பாக ரூ.15.20 கோடியினை பகிர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிக்கு பகிர்வு செய்யப்பட்ட தொகையினை நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ், தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக லிமிடெட் (TUFIDCO) இலிருந்து உரிய நிபந்தனைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளினபடி அரசின் கடன் பகிர்வு திட்டத்திலிருந்து நிதிஒதுக்கீடு செய்துத்தர வேண்டுமாய் கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. UFIDCO உடன் கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றை நிறைவேற்றவும், நாகப்பட்டினம் நகராட்சிக்கு TUFIDCO உடன் செயல்படுத்த வேண்டிய ஆவணங்களில் நாகப்பட்டினம் நகராட்சி பொதுவான முத்திரையை ஒட்டுவது உட்பட அனைத்து பிற சம்பிரதாயங்களையும் பூர்த்தி செய்யவும் இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டது.<br>சொத்து வரி, தொழில்முறை வரி மற்றும் பிற வருவாய் வசூல்கள் போன்ற வருவாய் வசூல்களுக்கான நாகப்பட்டினம் நகராட்சி வங்கிக் கணக்கு, காலாண்டு/மாதாந்திர திருப்பிச் செலுத்தும் உறுதிப்பாட்டின் அளவிற்கு TUFIDCO-க்கு ஆதரவாகப் பயன்படுத்தப்படும் எனவும் இதற்காக பிரத்யேக Escrow கணக்கு தொடங்கிடவும், இத்திட்டத்தின் கீழ் TUFIDCO-விற்கு கடன் மற்றும் பிற அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்தும் வரை கணக்கினை செயல்பாட்டில் வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்ட முன்மொழிவுக்காக TUFIDCO-விற்கு பெறப்பட்ட கடனுக்கான அசல், வட்டி மற்றும் பிற பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு நாகப்பட்டினம் நகராட்சியின் ஆண்டு பட்ஜெட்டில் வழிவகை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காகப் பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக, அசல், வட்டி மற்றும் TUFIDCO-விற்கு செலுத்த வேண்டிய பிற பணத்தைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் கீழ் அதிகாரப் பகிர்வு<br>மானியம் செலுத்துதல், பிற மானியங்கள், அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய வரி மற்றும் முத்திரை வரிகளில் பங்கு போன்றவற்றிலிருந்து தமிழ்நாடு அரசால் ஈடுசெய்து கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகிறது.<br>நாகப்பட்டினம் நகராட்சி சொத்து வரி, தொழில்முறை வரி போன்றவற்றில் ஏதேனும் காரணத்தால் திட்டமிட்டபடி அதிகரிப்பு செயல்படுத்தப்படாவிட்டால், எந்தக் காலகட்டத்திலும் ஏற்படும் ஏதேனும் குறுகிய கால வீழ்ச்சி TUFIDCO-க்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்துவதைப் பாதிக்காது என்றும், அத்தகைய சூழ்நிலையில், தமிழக அரசினால் வழங்கப்படும் மாநில நிதிக்குழு நிதியிலிருந்து குறிப்பிட்ட நிலுவைத் தொகையைக் ஈடுசெய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.55<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| | அலுவலக குறிப்பு 1 இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்( மன்றம் வழங்கலாம். | |
| | ந.க.எண் 1242/2023/இ1- | |

| 13.06.2025 | **பொருள் எண்.16**<br>அரசாணை (நிலை) எண்.97 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (LD-1(1) துறை நாள்.21.02.2025-ன் படி இலவச வீட்டு மனை பட்டா வழங்கிட நகராட்சிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்களின் ஆக்கிரமிப்புகளையும் வரன்முறைப்படுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தி கீழ்க்கண்ட நபர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்கிட நகராட்சி தீர்மானம் மற்றும் தடையின்மை சான்று கோரி வரப்பெற்ற வருவாய் வட்டாட்சியர், நாகப்பட்டினம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1624/2025/ஆ.2 நாள் 14.05.2025 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்.56<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |
|---|---|---|

| வ. எண் | வார்டு பிளாக் நகரளவு எண் | ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஆண்டுகள் | பயனாளிகள் | வகைபாடு | வீட்டின் தன்மை |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு-04 பிளாக்-17 நகரளவு எண்550/1 | 20 | திரு.சுந்தர்ராஜ் த/பெ.சுந்தமூர்த்தி | தோப்பு | மாடி வீடு |
| 2. | வார்டு-04 பிளாக்-17 நகரளவு எண்-520/1 | 20 | திருமதி.கனி மொழி, க/பெ. சங்கர் | தோப்பு | கூரை வீடு |
| 3. | வார்டு-04 பிளாக்-16 நகரளவு எண்-493/1 | 20 | திருமதி.புவனேஸ்வரி, க/பெ.முருகன் | தோப்பு | ஷிட் வீடு |
| 4. | வார்டு-04 பிளாக்-17 நகரளவு எண்-550/1 | 50 | திருமதி.ராதிகா, க.பெ.மாரியப்பன் | தோப்பு | மாடி வீடு |
| 5 | வார்டு-04 பிளாக்-16 நகரளவு எண்-493/1 | 50 | திருமதி.சீதா லெட்சுமி க.பெ.கந்தன் | தோப்பு | கூரை வீடு |
| | | | திருமதி.அனுராதா, க.பெ.ஆறுமுகம், | தோப்பு | கூரை வீடு |
| | | | திருமதி.குருமூர்த்தி த/பெ.பக்கிரிசாமி | தோப்பு | மாடி வீடு |
| 6. | வார்டு-04 | 15 | திரு.ரவி | சந்து | மாடி வீடு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிளாக்–45 நகரளவு எண்– 2516 | | கோவிந்தராஜ் | | |
| 7. | வார்டு–02 பிளாக்–03 நகரளவு எண்– 1737 | 20 | திருமதி.சுமதி, கோவிந்தராஜ் நாகப்பட்டினம் | தெரு | மாடி வீடு |
| | | | இந்திராணி, சுப்ரமணியன் நாகப்பட்டினம் | தெரு | மாடி வீடு |
| | | | திருமதி.ஆரோக்கியமேரி க.பெ.அமுல்ராஜ், நாகப்பட்டினம் | தெரு | மாடி வீடு |
| | | | திருமதி.முத்து லெட்சுமி, க.பெ/செல்வராஜ், நாகப்பட்டினம் | தெரு | மாடி வீடு |
| | | | திருமதி.வனஜா, க.பெ.தனபால், நாகப்பட்டினம் | தெரு | ஆர்.சி.சி கட்டிடம் |

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் |

ந.க.எண்.00881/2025/எப்.1

13.06.2025

**பொருள் எண்.17**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பிரிவு TN.51–AE–1101 வாகனத்திற்கு புதியதாக பேட்டரி விநியோகம் செய்வதற்கு 04.06..2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | பணிமனை நிறுவனங்களின் விவரம் | வழங்கப்பட்டத் தொகை |
|---|---|---|
| 01. | தில்லை எண்டர்பிரைசஸ், வாட்டர் டேங்க், ஜி.எச். ரோடு, நாகப்பட்டினம். | ரூ.8475/– |
| 02. | கணேஷ் எண்டர்பிரைசஸ், நேதாஜி ரோடு, திருவாரூர். | ரூ.8800/– |
| 03. | மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல், 916 நார்த் கேட் ஈஸ்ட் ரோடு, நாகப்பட்டினம். | ரூ.8900/– |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ், வாட்டர் டேங்க், ஜி.எச். ரோடு, நாகப்பட்டினம். நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி வாகனத்திற்கு புதியதாக பேட்டரி விநியோகம் செய்வதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ், வாட்டர் டேங்க், ஜி.எச். ரோடு, நாகப்பட்டினம். நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். |

தீர்மானம் எண்.57
அ.கு,
அனுமதிக்கப்பட்டது.

ந.க.எண் 0577/2025/இ2

13.06.2025

**பொருள் எண்.18**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு TN 51 – AF–6532 வாகனத்திற்கு புதியதாக இரண்டு பேட்டரிகள் விநியோகம் செய்வதற்கு 05.05..2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,

| **வ. எண்** | **பணிமனை நிறுவனங்களின் விவரம்** | **வழங்கப்பட்டத் தொகை** |
|---|---|---|
| 01. | தில்லை எண்டர்பிரைசஸ், வாட்டர் டேங்க், ஜி.எச். ரோடு, நாகப்பட்டினம். | ரூ.31000/– |
| 02. | மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல், 916 நார்த் கேட் ஈஸ்ட் ரோடு, நாகப்பட்டினம். | ரூ.32000/– |
| 03. | கணேஷ் எண்டர்பிரைசஸ், நாகப்பட்டினம். | ரூ.32600/– |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ், வாட்டர் டேங்க், ஜி.எச். ரோடு, நாகப்பட்டினம். நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி வாகனத்திற்கு புதியதாக இரண்டு பேட்டரிகள் விநியோகம் செய்வதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தில்லை எண்டர்பிரைசஸ், வாட்டர் டேங்க், ஜி.எச். ரோடு, நாகப்பட்டினம். நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். |

தீர்மானம் எண்.58
அ.கு, அனுமதிக்கப்பட்டது.

ந.க.எண் 1143/2025/இ2

13.06.2025

**பொருள் எண்.19**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு TN 51 – AD–3461 வாகனத்திற்கு இன்ஜின், சென்ஸார் மற்றும் உதிரி பாகங்கள் செயல்திறனற்று உள்ளதால் வாகனத்தை இயக்குவது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |

தீர்மானம் எண்.59
அ.கு
அனுமதிக்கப்பட்டது.

ந.க.எண். 0270/2025/இ2

13.06.2025

**பொருள் எண்.20**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண் TN 51 – AR–3832 ஈப்பு வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வாங்குவதற்கு 04.06.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

தீர்மானம் எண்.60
அனுமதிக்கப்பட்டது.

| வ.எண் | பணிமனை நிறுவனங்களின் விவரம் | வழங்கப்பட்டத் தொகை (வரிகள் உட்பட) |
|---|---|---|
| 01. | தில்லை எண்டர்பிரைசஸ்,<br>158, திருநள்ளார் ரோடு, காரைக்கால். | ரூ.8900 |
| 02. | மகா ஆட்டோ எலக்ட்ரிக்கல் & பேட்டரி ஒர்க்ஸ், நாகப்பட்டினம். | ரூ.9100 |
| 03. | கணேஷ் எண்டர்பிரைசஸ்,<br>217, நேதாஜி ரோடு, திருவாரூர். | ரூ.9200 |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "தில்லை எண்டர்பிரைசஸ், 158, திருநள்ளார் ரோடு, காரைக்கால்" நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி வாகனத்திற்கு புதியதாக பேட்டரி விநியோகம் செய்வதற்காக பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அளித்துள்ள "தில்லை எண்டர்பிரைசஸ், 158, திருநள்ளார் ரோடு, காரைக்கால்" நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம் |

ந.க.எண் 1577/2025/இ2

---

13.06.2025

**பொருள் எண்.21**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான சுகாதார பிரிவு TN-51 – H-7889 வாகனத்திற்கு உதிரி பாகங்கள் செயல்திறனற்று உள்ளதால் வாகனத்தை இயக்குவது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.35 ஆயிரத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். 1293/2025/இ2

தீர்மானம் எண்.61
அ.கு,
அனுமதிக்கப்பட்டது.

13.06.2025

**பொருள் எண்.22**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு TN 51 – AF–6532 வாகனத்திற்கு கிளட்ச் பிளேட், கவர் அசம்பிளி பழுதுநீக்கம் செய்வதற்கு 14.05..2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | பணிமனை நிறுவனங்களின் விவரம் | வழங்கப்பட்டத் தொகை |
|---|---|---|
| 01. | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மன்னார்குடி | ரூ.39994.40/– |
| 02. | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், காந்தி ரோடு, மன்னார்குடி. | ரூ.44304/– |
| 03. | ஸ்ரீ ராஜகோபாலசுவாமி ஆட்டோ கேரேஜ், மன்னார்குடி. | ரூ.48000/– |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், எண்.4, நடுவன்னியர் தெரு, மன்னார்குடி" நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின்

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்யும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், எண்.4, நடுவன்னியர் தெரு, |

ந.க. எண். 147 /2025/இ1

தீர்மானம் எண். 62
அ.கு, அனுமதிக்கப்பட்டது

---

13.06.2025

**பொருள் எண்.23**

நாகப்பட்டினம் நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல், தடுப்பூசி போடுதல் பணிகளுக்காக தேவைப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் (ரூ.4.50 இலட்சம்) நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| அலுவலக குறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 3119/2024/இ2

தீர்மானம் எண்.63
அ.கு, அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 13.06.2025 | **பொருள் எண்.24**<br>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022)இன் அத்தியாயம் x-a உடன் சேர்த்து படிக்கப்பட்ட பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி , நாகப்பட்டினம் நகராட்சியின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் கழிப்பறைகள் மற்றும் செப்டிக் தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அங்கு உருவாகும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதை ஒழுங்குபடுத்துவதற்காக துணைச் சட்டங்கள்உருவாக்கப்பட்டுள்ளது. இந்த துணைச் சட்டங்கள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023ன் அத்தியாயம் XI – பகுதி IV மற்றும் 2019ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள், மற்றும் அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் உத்தரவுகளுடன் சேர்த்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br><br>ந.க. எண். 1763/2025/ எச்1 | தீர்மானம் எண்.64<br>அ.கு,<br>பதிவு செய்யப்பட்டது |

13.06.2025

## பொருள் எண்.25

நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், அரசாணை எண். (2டி) 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி3) நாள். 11.02.2007 மற்றும் அரசாணை எண். (டி) 132 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி2) நாள்.28.02.2011–ன்படி தொகை ரூ.79.31 கோடிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதில் மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் பொது மக்களுடைய பங்களிப்பு தொகையாக (வைப்பு தொகை மூலம்) ரூ.11.94 கோடியை வசூல் செய்து பணியினை முழுஅளவில் நிறைவேற்றிட ஆணை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.638 நாள்.29.11.2007 மற்றும் நகர்மன்றத் தீர்மானம் எண் 64 நாள்.25.02.2010 –ன்படி பொதுமக்களிடம் பாதாள சாக்கடை திட்டத்திற்கு வைப்புத்தொகை அவ்வப்போது தொடர்ச்சியாக பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் முடிக்கப்பட்டு 2017–ம் ஆண்டு முதல் கட்டிடங்களுக்கு இணைப்பு வழங்கப்பட்ட நிலையில் கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்படாமல் விடுபட்ட பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வரித்தொகை செலுத்துமாறு கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு தவறாக கேட்பு எழுப்பப்பட்டுள்ளதாக வந்த மனுக்களின்மீது ஆய்வு செய்யப்பட்டதில் பாதாள சாக்கடை இணைப்பு இதுவரையில் கொடுக்கப்படவில்லை. எனவே, கீழ்க்கண்ட விபரப்படியான வரிவிதிப்புதாரர்களுக்கு பாதாளசாக்கடை கட்டணத் தொகை ரூ.3,06,670/– மற்றும் பாதாளசாக்கடை வரிவிதிப்பை நீக்கம் (Write off) செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | கோப்பு எண் மற்றும் தேதி | விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி | வருடம் | தொகை | சொத்து வரி எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 01 | 000701 04.03.2025 | பி. பல்கீஸ் நாச்சியார் 10 பங்களா தோட்டம், 02 வது தெரு, நாகூர் 611002. | 2023–26 | ரூ.3600 | 098/001/900107 |
| 2 | 24 | 001664 23.05.2024 | யு. மேரி ஜாஸ்மீன் 5A/5/1, வேதநாயகம் செட்டித் தெரு, நாகப்பட்டினம். | 2016–26 | ரூ.11300 | 098/024/900006 |
| 3 | 15 | 000690 04.03.2025 | கணேச குருக்கள் 1231/2A, நம்பியார் நகர் | 2016–26 | ரூ.11000 | 098/015/900519 |
| 4 | 14 | 000420 12.02.2025 | ஜி. மாரிமுத்து 15/15/பச்சைபிள்ளைக்குளம் தெரு, நாகப்பட்டினம் | 2016–26 | ரூ.10900 | 098/014/900047 |

| | | |
|---|---|---|
| அலுவலக | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண்.4303/2025/இ2

தீர்மானம் எண்.65
அ.கு.
அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td rowspan="3">13.06.2025</td>
<td colspan="3">பொருள் எண்.26<br>நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நே.மு.க.எண்.05/மு.அ/2025, நாள்.16.05.2025–ன் கடிதத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் வணிக வளாகங்கள் மற்றும் நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் நகராட்சிகளில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையங்களில் அமைக்கப்படவுள்ள வணிக வளாகங்களில் 10 சதவிகித வணிக வளாகங்கள் உழவர் உற்பத்தியாளர் சங்கத்தினருக்கும், 10 சதவிகித வணிக வளாகங்கள் மகளிர் சுய உதவிக்குழுவிற்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும், மேலும் மற்றவர்களுக்கு வழங்கப்படுவதைவிட 75 சதவிகிதம் கட்டண சலுகையினை உழவர் உற்பத்தியாளர் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கிடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு இதுகுறித்து கருத்துருக்கள் அனுப்பி மேல் நடவடிக்கை எடுக்கவும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td rowspan="3">தீர்மானம் எண்.66<br>அ.கு,<br>25 % கட்டண சலுகை வழங்கிடவும், மற்றும் முன்மொழிவுகள் அனுப்பிட அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>அலுவலக குறிப்பு</td>
<td>1</td>
<td>மன்றம் பதிவு செய்யலாம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு உரிய அனுமதிபெற முன்மொழிவுகள் அனுப்பி வைக்கலாம்.</td>
</tr>
<tr>
<td colspan="3">ந.க.எண். 6117/2007/அ1</td>
</tr>
</table>

13.06.2025

## பொருள் எண்.27

நாகப்பட்டினம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மற்றும் பொதுசுகாதார பணியின் கீழ் நகர எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தினசரி வீடுதோறும் சேகரமாகும் மக்கும் குப்பைகள் நாகூர், அரசு மருத்துவமனை பின்புறம் மற்றும் கோட்டைவாசல் ஆகிய மூன்று நுண்உரம் தயாரிக்கும் செயலாக்க மையங்களில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அளவீடு செய்வதற்கு இரண்டு எண்ணிக்கை எடைப்போடும் இயந்திரம் (Weighing Machine-Digital Reader) விநியோகம் செய்வதற்கு 19.05.2025 ஆம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் மட்டும் வரப்பெறப்பட்டதன் விவரம் பின்வருமாறு

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | மதிப்பீட்டு விலை விவரம் |
|---|---|---|---|
| 1 | Balu Scale Sales & Service<br>22-A First Line Beach ,<br>Nagapattinam-611001 | நாகூர், அரசு மருத்துவமனை பின்புறம் மற்றும் கோட்டைவாசல் ஆகிய மூன்று நுண்உரம் தயாரிக்கும் செயலாக்க மையங்களில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அளவீடு செய்வதற்கு இரண்டு எண்ணிக்கை எடைப்போடும் இயந்திரம் (Weighing Machine - Digital Reader) விநியோகம் செய்தல் பணி | ரூ.29500 |
| 2 | Nataraj Scale Services<br>20Ramaayakkan Tank Street<br>Velippalayam<br>Nagapattinam-611001 | | ரூ.30916 |
| 3 | Sri Vigneswara Scales Service<br>19,poonukeeswarar North street, Koranad, Mayiladuthurai-609002 | | ரூ.31152 |

மேற்கண்ட விவரப்படி வரப்பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்டுள்ள M/s Balu Scale Sales & Service நிறுவனத்தார் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைத்து எடைப்போடும் இயந்திரம் (Weighing Machine-Digital Reader) விநியோகம் செய்வதற்கு ரூ.29,500/- என்ற விலை விகிதத்தில் கொடுத்துள்ள விலைப்புள்ளியை பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
|---|---|---|

ந.க.எண்.1507/2025/எச்1

தீர்மானம் எண்.67
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 13.06.2025 | **பொருள் எண்.28**<br>**. நகர்மன்ற துணைத்தலைவர் எம்.ஆர்.செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 7– வது வார்டுக்குட்பட்ட பெருமாள் தென்சந்து பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை முற்றிலும் சிதலமடைந்து போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளதால், சிமெண்ட் சாலை உடன் அமைத்து தரவும், வண்டிப்பேட்டை வண்ணக்குளம் வடகரை பகுதியில் உள்ள சிமெண்ட் சாலைகள் மிகவும் சேதமடைந்து இருப்பதாலும் சிமெண்ட் சாலை அமைத்து தரவும்,<br>➢ பெருமாள் கீழவீதி, காளிகுட்டிநாயக்கன்தெரு, வண்ணாரத்தெரு புதுசாலை ரோடு, வண்ணாக்குளம் வடக்கரை ஆகிய சாலைகள் முற்றிலும் சிதலமடைந்து போக்குவரத்திற்கும் பாதசாரிகள் நடந்து செல்வதற்கும் மிக சிரமமாக உள்ளதால் இச்சாலைகளை செப்பனிட்டு தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.68<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 13.06.2025 | **பொருள் எண்.29**<br>**29. நகர்மன்ற உறுப்பினர் திருமதி எஸ்.பதுருநிஷாஅவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 2வது வார்டு மெயின் ரோடு முர்த்தி போட்டோ ஸ்டுடியோ அருகில் உள்ள கழிவு நீர் கால்வாய் மதகும் , ஜடையுனா ஹாஜியார் தெரு தர்கா குளம் கழிவு நீர் கால்வாய் மதகும் பழுதடைந்து உள்ளதால் அதனை உடன் சிரமைத்து தரவும்.<br>➢ செய்யது பள்ளி குளம் மேல்கரை கழிவுநீர் கால்வாய் முற்றிலும் உடைந்து மண் துர்ந்து உள்ளதால் அதனை தரம் உயர்த்தி கட்டிதரவும்.<br>➢ முத்து நபிஷா கார்டன் மண்சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்துதர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.69<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 13.06.2025 | **பொருள் எண்.30**<br>**30. நகர்மன்ற உறுப்பினர் திருமதி.என்.அஞ்சலிதேவி அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 4–வது வார்டில் மேலபட்டினச்சேரி பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சிராளம்மன் மற்றும் வீரம்மா காளியம்மன் ஆலயத்தை சுற்றி அமைந்துள்ள சாலையானது பைப்லைன் புதைக்கும் போது சிதளமைடைந்து உள்ளது.<br>➢ இக்கோவிலின் ஆடி மாத திருவிழா அம்மன் வீதியலா நடைபெறவுள்ளதால் மேலபட்டினச்சேரி பகுதியில் 300 மீட்டர் அளவிற்கு சிமெண்ட் சாலை அமைத்து தரவும், 4 வது வார்டு மேல பட்டினச்சேரி பகுதியில் அங்கான்வாடி மையமனது மேலபட்டினச்சேரி புயல் பாதுகாப்பு மையத்தில் நீண்ட காலமாக இயங்கி வருகிறது. தற்சமயம் புயல் பாதுகாப்பு மையம்மானது சிதளமைடந்து ஆபாத்தான நிலையில் உள்ளதால் குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மேலபட்டினச்சேரியில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.70<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 13.06.2025 | **பொருள் எண்.31**<br>**31. நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.தியாகராஜன் அவர்களால் கொண்டுவரப்படும்**<br>**கோரிக்கை மனு –**<br>➢ 8–வது வார்டு வெற்றிகாரன் திருவாசல் முதல் இ.சி.ஆர்.ரோடு வரை குண்டு குழியுமாக உள்ளது மேற்படி சாலையை தார் சாலையாக அமைத்து தரவும்,<br>➢ பெருமாள் குளம் மேல்கரை ஈமச்சடங்கு செய்யும் பகுதி மிகவும் மோசமாக நிலையில் உள்ளதால் மேற்படி சாலையை தார் சாலையாக அமைத்து தரவும்.<br>➢ குயவர் மேட்டு தெருவிற்கு நீண்டகாலமாக தார் சாலை இல்லை, அப்பகுதி குண்டு குழியுமாக உள்ளதால் மேற்படி சாலையை தார் சாலையாக அமைத்து தரவும்.<br>➢ நாகூர் பெருமாள் கோவிலை சுற்றி சிமெண்ட் சாலை அமைத்து தரவும்.<br>➢ எனது வார்டில் எரிக்கும் சுடுகாட்டிற்கு ரோடு வசதி இல்லாமல் உள்ளது, அதற்கு சிமெண்ட் சாலை அமைத்து தரவும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.71<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 13.06.2025 | **பொருள் எண்.32**<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.எ.ஜெ. ஆசிக் ஹமீது அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>9–வது வார்டுக்குட்பட்ட முடுக்குத்தாழை சந்து, பங்களாத்தோட்டம், 1வது சந்து , 2வது சந்து, 3வது சந்து, 4வது சந்து, 4வது சந்தில் முதல் குறுக்குத்தெரு, இரண்டாவது குறுக்குத்தெரு மற்றும் புதுமனைத்தெரு மில் சந்து ஆகிய பகுதிகளுக்கு சாலை அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண்.72<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 13.06.2025 | **பொருள் எண்.33**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கு.ஜோதிலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 15 வார்டு நெய்தல் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் சிதளமடைந்து இருப்பாதால் ஒரு நிரந்தர மழைநீர் வடிகால் அமைத்து தரவும் .<br>➢ சொக்கநாதர் கோவில் தெரு மற்றும் கொல்லைகாட்டு தெரு இணைப்பு சாலை, பிள்ளையார் கோவில் தெரு செபஸ்தியார் கோவில் எஸ்.எஸ்.எம் நகர் தெரு, இளஞ்சேரன் நகர் இணைப்பு தெரு , காந்தி நகர் காடம்பாடியில் உள்ள அண்ணா நகர் ஆகிய பகுதிகளுக்கு பேவர் பிளாக் ரோடு அமைத்து தரவும்.<br>➢ இளஞ்சேரன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து தரவும்.<br>➢ நெய்தல் நகர் பகுதியில் உள்ள இரண்டு பூங்காக்கள் மற்றும் 15 வார்டில் உள்ள 7 பூங்காகளையும் சீரமைத்து தரவும். | தீர்மானம் எண்.73<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 13.06.2025 | **பொருள் எண்.34**<br>**34. நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஜென்னத்பேகம் அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 29–வது வார்டுக்குட்பட்ட மரைக்காயர் ஜாமியா மஸ்ஜித் பள்ளிவாசல் நுழைவு வாயிலில் உள்ள காம்பவுண்ட் சுவர் ரோடு ஒட்டி உள்ள நடைபாதையில் பேவர் பிளாக் கல்அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.74<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 13.06.2025 | **பொருள் எண்.35**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு வழக்குகள் பார்ப்பதற்கு நகராட்சி நிலை வழக்கறிஞர் இல்லாத நிலையில் திரு.J.முஹம்மது அலி என்பவர் சுய விவரக் குறிப்பு மற்றும் வழக்கறிஞர் பதிவு சான்றுடன் விண்ணப்பம் அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு \| **1** \| **மன்றம் அனுமதிக்கலாம்** | தீர்மானம் எண்.75<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது |

/உண்மை நகல்/

(ஒம்) இரா,மாரிமுத்து
நகர்மன்ற தலைவர்